பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 08 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவர்கள் சமூக ஊடகங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

2. உள்கட்டமைப்பு பணிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்தல், உற்பத்தியைத் தொடங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தை தவெக அரசு எவ்வித தடையுமின்றி முறையாக செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி கேட்டுக்கொண்டுள்ளது.

4. செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மாணவர்கள் சமூக ஊடகங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூரில் தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், புதுமைக் கண்டுபிடிப்பு, தொடர்ச்சியான திறன் மேம்பாடு ஆகியவற்றில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அத்துடன் போதைப்பொருள் பயன்பாட்டில் இருந்து விலகியிருக்குமாறும், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துமாறும் குடியரசு துணைத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

சாத்தியமில்லாததாக தோன்றுவதை சாதிப்பதற்கான சக்தியும், உறுதியும் இளைஞர்களிடம் உள்ள இக்காலத்தில் நேரம் மிகவும் மதிப்பு மிக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இயற்றப்பட்ட பொதுத் தேர்வுகள் திருத்த மசோதா, பொதுத் தேர்வு முறைகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று கூறினார்.

உயர் கல்வியில் சேர்க்கை விகிதம் தற்போது 30 சதவீதமாக உள்ள நிலையில், அதை 2035ஆம் ஆண்டுக்குள் 50 சதவீதமாக அதிகரிப்பதற்கான இலக்கு நிறைவேறும் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

உள்கட்டமைப்பு பணிகளை உரிய நேரத்தில் நிறைவு செய்தல், நில ஒதுக்கீடு, முதலீடு, உற்பத்தியைத் தொடங்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று மாநில அரசுகளை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய தொழில்துறை வழித்தட மேம்பாடு மற்றும் செயல்படுத்துதல் கூட்டத்திற்கு அவர் தலைமை தாங்கியபோது இதனைத் தெரிவித்தார்.

உற்பத்தியை விரிவுபடுத்துதல், உலக அளவில் போட்டித் தன்மையுள்ள தொழில்துறை சூழல்களை வளர்த்தல் ஆகியவற்றுக்கு தொழில்துறை வழித்தடங்கள் முக்கிய தூணாக திகழ்கிகறது என்று அவர் கூறினார்.

இந்திய குழு என்ற உணர்வுடன் தொழில்துறை வழித்தட மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**<<<<>>>>**

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தை தவெக அரசு எவ்வித தடையுமின்றி முறையாக செயல்படுத்த வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இத்திட்டத்தின்கீழ் பணிக்கு வருபவர்களுக்கான வருகைப் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இடைத்தரகர்கள் இன்றி பணியாளர்களின் ஊதியம் நேரடியாக வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தகுதியானவர்களுக்கு இத்திட்டத்தின் பலன்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்று மாநில அரசை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையே மத்திய அரசின் இந்த 125 நாள் ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் தமிழகம் முழுவதும் 10 ஆயிரத்து 185 நீர்ப்பாசன கால்வாய்கள், 809 ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைகளைப் புனரமைக்கும் பணிகள் நடைபெற

இருப்பதாக வெளியாகியுள்ள தகவல் மகிழ்ச்சியளிப்பதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெறுவதை ஒட்டி சில ரயில்களின் புறப்பாடு மற்றும் வருகையில் மாற்றங்களை செய்து தெற்கு ரயில்வே அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அதன்படி மன்னார்குடியில் இருந்து சென்னை எழும்பூருக்கு இயக்கப்படும் ரயில் அடுத்த மாதம் 4ஆம் தேதி முதல் அக்டோபர் 13ஆம் தேதி வரை தாம்பரம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் இருந்து இயக்கப்படும் மலைக்கோட்டை அதிவிரைவு ரயில் அடுத்த மாதம் 9ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரையும், அதன் பிறகு அடுத்த மாதம் 21ஆம் தேதி முதல் அக்டோபர் 14ஆம் தேதி வரையும் மாம்பலம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து மன்னார்குடிக்கு இயக்கப்படும் ரயில், அடுத்த மாதம் 5ஆம் தேதி முதல் அக்டோபர் 14ஆம் தேதி வரை தாம்பரத்தில் இருந்து புறப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

சேலத்தில் இருந்து சென்னை எழும்பூருக்கு இயக்கப்படும் அதிவிரைவு ரயில் அடுத்த மாதம் 12ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை மாம்பலம் வரை மட்டுமே இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வட கடலோரப் பகுதிகளின் ஒருசில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஹோர்முஸ் நீரிணை விவகாரம் தொடர்பாக ஈரானுடன் ஒப்பந்தம் மேற்கொண்டால் குண்டுவீசி தாக்குதல் நடத்தப்படும் என்று ஓமன் நாட்டை அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

-------------

சோமாலியாவில் Baidoa நகரில் ராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

-------------

தில்லியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தது.

-------------

ஜார்கண்டில் மாணவர்களின் போராட்டத்தையடுத்து, 2024ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அனைத்து போட்டித் தேர்வுகளையும் அம்மாநில அரசு ரத்து செய்துள்ளது.

-------------

கேரளம் விழிஞ்சம் துறைமுகத்தில் இருந்து இன்று முதல் நேரடி ஏற்றுமதி இறக்குமதி சேவைகளை முதலமைச்சர் திரு. V.D. சதீஷன் தொடங்கி வைக்கிறார்.

-------------

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட 452 கிலோ கடல் அட்டைகளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-------------

தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் கொசுக்கள் உருவாக காரணமாக இருக்கும் தண்ணீர் தேங்கக்கூடிய 395 கிலோ பழைய பொருட்களை மாநகராட்சி ஊழியர்கள் அகற்றினர்.

-------------

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் ஆடிப்பூர தேர்த்திருவிழாவின் நிறைவு நாளான நேற்று புஷ்பயாகம் நடைபெற்றது.

-------------

கடலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 917 மனுக்களைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை, வெள்ளத்தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பாதுகாப்பு பணிகள் தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஆட்சியர் திருமதி சினேகா தலைமையில் நடைபெற்றது.

-------------

சென்னையில் இருந்து பஹ்ரைன் நாட்டுக்கு கடத்த முயன்ற 20 லட்சம் ரூபாய் அமெரிக்க டாலர் கரன்சிகளை விமான நிலைய சுங்கத்துறையினர் பறிமுதல் செய்து 2 பேரை கைது செய்தனர்.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

நெதர்லாந்தின் Amstelveen நகரில் நடைபெற உள்ள இப்போட்டி மாலை 6.30க்கு தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து 4-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

-----------

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் கவிப்பிரியா செல்வம் - சிம்ரன் சிங்கி இணை இரண்டாம் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 22-20, 21-14 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Nikol Carulla - Carman Maria Jimenez இணையை வென்றது.

----------------

செக் குடியரசில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அவர் 7-6, 6-4 என்ற செட் கணக்கில் பிரேசிலின் Edvardo Ribeiro-வை வென்றார்.

--------------

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியில் இந்தியா இன்று கஜகஸ்தானை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

---------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் சேப்பாக் அணி இன்று கோவை அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் நடைபெற உள்ள இப்போட்டி, இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

-------------

ஆசிய ஓபன் ஸ்பீட் ஸ்கேட்டிங் போட்டி உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் நேற்று தொடங்கியது.

14 நாடுகள் பங்கேற்றுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் 130 வீரர்கள் கலந்துகொண்டுள்ளனர். வரும் வியாழக்கிழமை வரை இப்போட்டி நடைபெற உள்ளது.

<<<<The End>>>>